## பட்டு வளர்ப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்

First Published : 28 Jun 2011 10:37:13 AM IST

தஞ்சாவூர், ஜூன் 27: தஞ்சாவூரை அடுத்துள்ள வல்லம்புதூர் கிராமத்தில் பட்டு வளர்ச்சித் துறை சார்பில், விவசாயிகளுக்கு பட்டு வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் அண்மையில் நடைபெற்றது.

பட்டு வளர்ச்சித் துறையின் மண்டல துணை இயக்குநர் எஸ். கோபால்சாமி, சேலம் மத்திய பட்டு ஆராய்ச்சி மைய விஞ்ஞானி என். ரவி ஆகியோர் பட்டு வளர்ப்பு குறித்து பேசினர். காப்பீட்டு முறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

## நெல் பயிரில் கூடுதல் மகசூல் பெற ஆலோசனை

First Published : 28 Jun 2011 10:21:23 AM IST

பெரம்பலூர், ஜூன் 27: நெல் பயிருக்கு நீலப் பச்சைப் பாசி இடுவதன் மூலம் 25 சத கூடுதல் மகசூல் பெறலாம் என்றார் பெரம்பலூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் எம். செந்தமிழ்ச்செல்வன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தழைச்சத்துத் தரக்கூடிய யூரியா விலை அதிகமாகிக் கொண்டே போவதால், சாகுபடி செலவு அதிகமாகி நிகர லாபம் குறைகிறது. நெல்லில் இடும் யூரியாவானது 30- 45 சதம் வீணாகிறது. இதை தவிர்க்க, இயற்கையில் கிடைக்கும் நீலப் பச்சைப் பாசியை வயலில் இடுவதால் 25- 35 கிலோ வரை நெல் பயிருக்கு தழைச்சத்து கொடுக்கலாம்.

நெல் வயல்களில் தண்ணீர் தேங்கி நிற்பதால், நீலப் பச்சைப் பாசி அடையாக மிதக்கும். இது சில வைட்டமின், வளர்ச்சி ஊக்கிகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. மேலும், பூச்சிக்கொல்லி, பூஞ்சானக்கொல்லி, களைக்கொல்லி உள்ளிட்டவற்றை தாங்கி வளரக்கூடியது.

நீலப் பச்சைப் பாசி இடுவதால், அது காற்றிலுள்ள தழைச்சத்தை கவர்ந்து நெல் பயிருக்கு தேவையான அளவு கொடுக்கிறது. இதனால் 25 கிலோ யூரியாவை குறைத்து இடலாம். மேலும்,

பயிர் வளர்ச்சிக்குத் தேவையான வளர்ச்சி ஊக்கி, அமினோ அமிலங்கள், வைட்டமின் உற்பத்தி செய்து நெல் பயிரை செம்மையாக வளர வைக்கிறது. மண்ணில் நீர்தேங்கும் திறன் 40 சதம் அதிகரிக்கிறது.

நெல் பயிருக்கு தழைச்சத்து, ஏனைய சத்துக்கள் கிடைப்பதால் பயிர் நன்கு வளர்ந்து, அதிக கதிர்களும், மணிகளும் கொடுத்து ஏக்கருக்கு 150- 200 கிலோ வரை அதிகப்படியான மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. நீலப் பச்சைப் பாசி தயாரிப்பதற்கு தண்ணீர் வசதியுள்ள நிழல்படாத சூரிய ஒளி கிடைக்கும் இடமாக இருக்க வேண்டும்.

களிமண், வண்டல் மண் உள்ள நிலங்கள் பாசி வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றது. முதலில் ஓர் சென்ட் பாத்திகள் அமைத்து தண்ணீர் நிற்பதற்கு வசதியாக களிமண் கொண்டு வரப்புகளை மெழுகிவிட வேண்டும். ஓர் பாத்திக்கு 2 கிலோ சூப்பர்பாஸ்பேட், 200 கிராம் கார்போபியூரான் குருணை மருந்தை சீராக இட வேண்டும். பிறகு பொடிசெய்த 5 கிலோ நீலப் பச்சை பாசியை பாத்தியில் சீராக தூவவேண்டும். 7- 10 நாள்களில் பாசி நன்றாக வளர்ந்து நுரையாக மிதக்க ஆரம்பிக்கும்.

15 நாள்களுக்கு பிறகு, தண்ணீர் கட்டுவதை நிறுத்தி நன்கு வளர்ந்த பாசியை அடையாக பெயர்த்து வெயிலில் காயவைத்து சேமித்து வைக்கலாம். ஓர் சென்டுக்கு 30- 40 கிலோ வரை நீலப் பச்சைப் பாசி கிடைக்கும். இது 6 மாதம் முதல் ஓர் ஆண்டு வரை உயிருடன் இருக்கும். நன்றாகப் பொடி செய்த நீலப் பச்சைப் பாசியை ஏக்கருக்கு 4 கிலோ நடவு செய்த 7-வது நாள் சீராக இட வேண்டும். தொடர்ந்து 3 முறை இடுவதால், நெல் பயிர் நன்றாக வளர்கிறது.

எனவே, நெல் பயிருக்கு தேவையான தழைச்சத்து கொடுக்கக்கூடிய நீலப் பச்சைப் பாசி கிலோ ரூ. 2.75 விலையில், பெரம்பலூர் வேளாண் விரிவாக்க மையத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதை வாங்கி நெல் வயலில் இட்டு 25 சத கூடுதல் மகசூல் பெறலாம் என்றார் அவர்.

தினமலர்

**உலக சந்தையில் விலை மிகவும் அதிகரித்துள்ளதால்இறக்குமதியாகும் கிராம்பை ஏற்றுமதி செய்யும் வர்த்தகர்கள்**

ஜூன் 29,2011,01:37



கொச்சி:இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளில் கிராம்பு விலை, வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்துள்ளது. இதனால், கிராம்பு இறக்குமதியை மேற்கொண்டு வந்த இந்திய வர்த்தகர்கள், முதன் முறையாக 300 டன் கிராம்பை சிங்கப்பூர் மற்றும் இந்தோனேஷிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளனர்.

உலகளவில் கிராம்பு உற்பத்தியில், இந்தோனேஷியா முதலிடத்தில் உள்ளது. இங்கு ஆண்டுக்கு 1.50 லட்சம் டன் கிராம்பு உற்பத்தியாகிறது. இந்நாட்டின் மொத்த கிராம்பு உற்பத்தியில், 80 சதவீத பங்களிப்பை கொண்ட மனாடோ, ஜாவாபகுதிகளில் உள்ள பெரும்பாலான கிராம்பு மரங்கள், திடீரென்று பூச்சி தாக்குதலுக்கு ஆளாகியுள்ளன.

இதனால், கிராம்பு உற்பத்தி பாதிக்கப்பட்டு, அதன் விலை இதுவரை இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது. ஒரு டன் கிராம்பு விலை 19 ஆயிரம் முதல் 21 ஆயிரம் டாலர் வரை உயர்ந்துள்ளது. கிராம்பு மரங்கள், 5 - 7 ஆண்டுகளுக்கு பிறகே பூத்து பயனளிக்க தொடங்கும் என்பதால், இந்தோனேஷியாவில் வரும் ஆண்டுகளில், கிராம்பு உற்பத்தி வெகுவாக குறையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதையடுத்து, இந்தோனேஷியாவில் உள்ள சிகரெட் நிறுவனங்கள், உலக நாடுகள் பலவற்றில் இருந்தும் கிராம்பு இறக்குமதியில் ஈடுபடுகின்றன. இந்நிறுவனங்களுக்கு சராசரியாக ஆண்டுக்கு, 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் டன் வரை கிராம்பு தேவைப்படுகிறது.

இந்தியாவை பொறுத்தவரை, மசாலா தயாரிப்பு நிறுவனங்கள் அதிகளவில் கிராம்பை கொள்முதல் செய்கின்றன. நம் நாட்டிற்கு, ஓராண்டில் சராசரியாக 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் டன் வரை கிராம்பு தேவைப்படுகிறது.ஆனால், கிராம்பு உற்பத்தி 1,000 டன்னிற்கும் குறைவாகவே உள்ளது. இதனால், உள்நாட்டு தேவையை சமாளிக்கும் வகையில், இந்திய வர்த்தகர்கள் இந்தோனேஷியா, பிரேசில், மடகாஸ்கர், ஜான்சிபார், இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து கிராம்பை இறக்குமதி செய்து வருகின்றனர்.

இந்நாடுகளை சேர்ந்த ஏற்றுமதியாளர்கள், ஒரு டன் கிராம்பு 6,000 - 8,000 டாலர் என்ற விலையில், இந்தியாவிற்கு கிராம்புஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் செய்திருந்தனர்.ஆனால், தற்போது சர்வதேச சந்தையில் கிராம்பு விலை இருமடங்கிற்கும் அதிகமாக உயர்ந்துள்ளதால், அதை இந்தியாவிற்கு அனுப்பாமல் இந்தோனேஷியா அல்லது சிங்கப்பூருக்கு ரொக்க பரிமாற்றத்திற்கு அனுப்பி வருகின்றனர்.

இதனால், இந்திய வர்த்தகர்கள், கிராம்பு விளையும் பகுதிகளுக்கு நேரடியாக சென்று, ஒப்பந்தப்படி அதை கொள்முதல் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.மும்பை, டில்லி சந்தைகளில் ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில், ஒரு கிலோ கிராம்பு 600 முதல் 811 ரூபாய் வரையிலான விலையில் வழங்க வர்த்தகர்கள் ஒப்பந்தம் செய்துள்ளனர். ஆனால், விலை உயர்வு காரணமாக, இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.தமிழகத்தில், நாகர்கோவில் பகுதியில் கிராம்பு அதிகம் விளைகிறது.

ஏற்றுமதியாளர்கள், ஒரு கிலோ கிராம்புக்கு 850 ரூபாய் வழங்க தயாராக உள்ளனர். ஆனால், 1,000 ரூபாய் வரை விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில், விவசாயிகள் கிராம்பை விற்காமல், இருப்பில் வைத்துள்ளனர்.இத்தகைய காரணங்களால், உள்நாட்டில் கிராம்பு பற்றாக்குறை அதிகரித்து, வரும் மாதங்களில் விலை மேலும் உயரும் என வர்த்தகர்கள் தெரிவித்தனர். இந்நிலையில், கிராம்பு இறக்குமதி தொடர்பாக, மத்திய நிதியமைச்சகம், கலால் மற்றும் ”ங்க வரி வாரியம் ஆகியவை அனைத்து துறைமுகங்களுக்கும் அறிக்கை அனுப்பியுள்ளது.

அதில், கிராம்பு இறக்குமதியை தீவிரமாக கண்காணிக்கவேண்டும்.ஒரே மாதிரியான மதிப்பை நிர்ணயிக்க வேண்டும். மதிப்பை குறைத்து காட்டுவது உள்ளிட்ட நடவடிக்கைகளை தடுக்க வேண்டும் என்றுகேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வரும் 2011-12ம் பருவத்தில்காபி உற்பத்தி 3 லட்சம் டன்னாக இருக்கும்
ஜூன் 29,2011,01:41



பெங்களூரு:வரும் 2011-12ம் பருவத்தில் (அக்டோபர்- செப்டம்பர்) நாட்டின் காபி உற்பத்தி, 2.99 லட்சம் டன்னாக இருக்கும் என, காபி வாரியம் மதிப்பீடு செய்துள்ளது. இது, நடப்பு காபி பருவத்திற்கான அதே அளவாகும்.காபி பூ பூத்ததற்குப் பிறகு மேற்கொண்ட மதிப்பீட்டின்படி, நடப்பு பருவத்தில், 3.08 லட்சம் டன் காபிஉற்பத்தியை இந்த வாரியம் முன்பு மதிப்பீடு செய்திருந்தது.


ஆனால் தற்போது, 3 லட்சம் டன் அல்லது 2.99 லட்சம் டன் அளவிற்கு தான் இருக்குமென, மறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த காபி உற்பத்தியில், ரோபஸ்டா வகை காபியின் பங்களிப்பு 60 சதவீதம் என்ற அளவிலும், அராபிகா வகை காபியின் பங்களிப்பு 40 சதவீதம் என்ற அளவிலும் உள்ளது.வரும் காபி பருவத்தில், ரோபஸ்டா வகை காபி உற்பத்தி 1.80 லட்சம் டன்னாக இருக்கும் என்றும், இது நடப்பு பருவத்தில், 2.04 லட்சம் டன் என்ற அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதே ஆண்டுகளில், அராபிகா காபி உற்பத்தி முறையே 1.20 லட்சம் டன் மற்றும் 95 ஆயிரம் டன் என்ற அளவில்இருக்கும்.நடப்பு 2010-11ம் பருவத்தில், உள்நாட்டில், 1.93 லட்சம் எக்டேரில் அராபிகா காபியும், 2.06 லட்சம் எக்டேரில், ரோபஸ்டா வகை காபியும் சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**வளர்ப்பிற்குரிய முக்கிய அலங்கார மீனினங்கள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2011,00:00 IST





**நவீன தொழில்நுட்பம்**

நன்னீர் மீன்கள், குட்டி ஈனுபவை மற்றும் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்பவை என இரு வகைப்படும். குட்டியிட்டு இனப்பெருக்கம் செய்பவைகளில் கப்பி, மொலி, பிளாட்டி, ஸ்வோர்ட்டேய்ஸ் ஆகியவைகள் சாதாரணமாகக் கண்ணாடித் தொட்டியை அலங்கரிப்பவை.

கப்பி: ஆண் மீன்கள் 2.5 செ.மீ. நீளமும், பெண் மீன்கள் 5 செ.மீ. நீளம் வரையிலும் வளர்கின்றன. 7.5-8.5 கார அமில நிலையும் வளர்ப்பிற்கேற்ப தட்பவெப்ப சூழ்நிலையும் (26-30 டிகிரி செ.கி) ஏற்றவை. 4-6 வார காலத்திற்கு ஒருமுறை 50 குட்டிகளை இடுகின்றன.

**மோலி:** கறுப்பு, வெள்ளை, ஆரஞ்சு மற்றும் சாக்லேட் நிறமுடையவை. 9 செ.மீ. நீளமும், 10-15 கிராம் எடை வரையிலும் வளர்பவை. 5 வாரத்திற்கு ஒரு முறை 250 குட்டிகளை இடும். ஆண் மீன்களின் முதுகுத் துடுப்பு நிமிர்ந்து விசிறி போல் காணப்படும்.

**பிளாட்டி**: பல்வேறு வண்ண வகையினை உடையது. ஆண் மீன்கள் 4 செ.மீ. வரையிலும், பெண் மீன்கள் 5 செ.மீ. வரையிலும் 3-4 வார இடைவெளிக்கு ஒரு முறை 50-75 குட்டிகளை இடும். 10 பெண் சினை மீன்களுக்கு ஒரு ஆண் மீன் என இருப்பு செய்ய வேண்டும்.

**ஸ்வோர்ட்டெய்ல்:** ஆண் மீன்கள் 8 செ.மீ. வரையிலும் பெண் மீன்கள் 12 செ.மீ. நீளம் வரையிலும் வளர்கின்றன. 5 பெண் மீன்களுக்கு ஒரு ஆண் மீன் போதுமானது. ஆண்மீனின் வால் துடுப்பு வீரனின்வாள் போல் நீண்டு வனப்புடன் காணப்படும்.

எல்லா வகையான குட்டியிடும் அலங்கார மீன்களுக்கும் நீர்ப்பாசிகள் மறைவிடமாகவும் பாதுகாப்பாகவும் விளங்குகின்றன. புழு, பூச்சி போன்ற உயிர் உணவுகளையே மீன்கள் விரும்பி

உண்கின்றன. எனவே சினை மீன்களின் இனப்பெருக்க உணர்ச்சியினைத் தூண்ட புரதம் நிறைந்த உணவுகளையும் தகுந்த மறைவிடங்களையும் அளித்து குட்டிகளைப் பாதுகாத்து உற்பத்தி செய்ய வேண்டும்.

முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்கின்ற மீன்களில் கோய் கெண்டை, செவ்வால் சுறா, பொன்மீன், ரோசி பாரிப், டைகர் பாரிப், டெட்ரா, கவுராபி, பைட்டர், ராமிரன் நீல சிக்ளிட், அவுரோங்கல், ஏஞ்சல், ஆஸ்கார் ஆகியவை கண்ணாடித் தொட்டிகளை அலங்கரித்து கண்களுக்கு விருந்தூட்டுபவை. வியாபார ரீதியில் வளர்த்து உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு ஏற்றவை.

**பொன்மீன்:** சிவப்பு ஒராண்டா, சிங்கத்தலை, முட்டைக்கண் முத்துச்செதில், காரிகோ, கருப்புமூர் போன்ற நூற்றுக்கணக்கான வகையான பொன்மீன்கள் உள்ளன. இம்மீன்கள் தாவர மற்றும் புழுபூச்சி போன்ற மாமிச உணவுகளை உண்டு 4 மாதகாலத்தில் 20 முதல் 25 கிராம் உடல் எடையினைப்பெறும். 5 முதல் 6 மாத காலத்தில் பருவ முதிர்ச்சியடைந்து இனப்பெருக்கம் செய்கின்றன. காரத்தன்மையுடையதும் (7.5 - 8.5) மிதமான வெப்பநீரும் (25-28.5 டிகிரி செ.கி), மித கடின நீரும் (150-250 மி.கி/லி) பொன் மீனுக்கு ஏற்ற நீர்ச்சூழல் குணங்கள் 25 கிராம் எடையுள்ள பொன்மீன் கிட்டத்தட்ட 750 ஒட்டும் தன்மையுள்ள முட்டைகளை நீர்ப்பாசிகளில் இடுகின்றன. சிறிய நூல் போன்ற நுண் குஞ்சுகள் 65-72 மணி நேரத்தில் பொரிந்து வெளிவருகின்றன. பொன்மீன்களைத் தொட்டிகளில் தனியாகத்தான் வளர்க்க வேண்டும்.

(தகவல்: தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை-1)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**மாம்பழங்களை கால்சியம் கார்பைடு உபயோகித்து பழுக்கவைப்பதால் ஏற்படும் தீமைகள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2011,00:00 IST



கால்சியம் கார்பைடு: இது ஒரு ரசாயனப் பொருள். சுத்தமான ரசாயனப் பொருள் வெண்மை நிறமாகவும், சற்று கலப்படமான நிலையில் கருப்பு கலந்த சாம்பல் நிறத்துடனும் இருக்கும்.

வெள்ளைப்பூண்டின் வாசனை சிறிதளவு இருக்கும். இதில் ஆர்சனிக் மற்றும் பாஸ்பரஸ் ஹைட்ரைடு போன்ற நச்சுப் பொருட்கள் இருக்கும். இவற்றின் மீது ஈரம் பட்டவுடன் அசிட்டிலின் என்ற வாயுவை வெளியேற்றுகின்றது. இவ்வாயு பழங்களைப் பழுக்கவைக்கின்றது. இதன் விலை கிலோ ரூ.25-30 வரை இருக்கும். ஒரு கிலோ இவ்வுப்பைக் கொண்டு சுமார் 200 கிலோ வரை மாம்பழங்களை பழுக்க வைக்க முடியும். தேவையான அளவு கார்பைடு உப்பை ஒரு பேப்பரில் கட்டி பழப்பெட்டிகளை லாரியிலோ குடோனிலோ அடுக்கும்போது அதனுள் வைத்துவிட்டால் 24-48 மணி நேரத்திற்குள் பழங்களின் மேற்தோல் முழுவதும் ரகத்திற்கு ஏற்றவாறு கலர் மாறிவிடும். முற்றிய காய்களிலுள்ள ஈரம் மற்றும் காய்கள் சுவாசிக்கும்போது ஏற்படக்கூடிய வெப்பத்தாலும் காய்கள் எளிதில் கலர் மாற உதவுகின்றன.

**பழுக்கும் முறை**: முற்றாத காய்களை பழுக்கவைக்க சற்று அதிகமாக கற்கள் வைக்க வேண்டும். கற்கள் மூலம் பழுத்த பழங்களின் மேல்தோல் மட்டுமே மஞ்சள் நிறமாக மாறும். அதன் உள்ளே எந்தவிதமான ரசாயன மாற்றம் இன்றி அப்படியே இருக்கும். அதனால் இனிப்பு சுவை குறைந்து பழங்கள் மணமின்றி இருக்கும். இயற்கையிலேயே பழுத்த பழங்களின் மேற்தோல் ஒரே சீராக கலர் மாறி இருக்காது. ஆனால் கார்பைடு உபயோகித்து பழுக்கவைத்த பழங்களின் மேற்தோல் ஒரே சீராக மஞ்சள் நிறமாகத் தோற்றமளிக்கும். மணம் குன்றி இருக்கும். இதை வைத்தே கல் வைத்து பழுக்கவைத்த பழங்களைக் கண்டறியலாம். இந்த வேதிப்பொருள் மேலைநாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது.

**உடல்நலக்கேடு:** கால்சியம் கார்பைடிலுள்ள ஆர்சனிக் மற்றும் பாஸ்பரஸ் ஹைட்ரைடு உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியவை. இதன் அளவு அதிகமாகும்போது புற்றுநோய் வர வாய்ப்புள்ளது. சுமார் 33-35 சதவீத அசிட்டிலின் வாயுவை ஒருவர் சுவாசித்தால் 5-7 நிமிடங்களில் மயக்கமடையலாம். கார்பைடு உபயோகித்து பழுக்க வைத்த பழங்களை உண்பதால் வாந்தி, பேதி, நெஞ்சில் எரிச்சல், குடற்புண், கண்களில் எரிச்சல், மூச்சு விடுவதில் சிரமம் மற்றும் உணவை விழுங்குவதில் சிரமம் போன்ற உடல்நலக்கேடுகள் உண்டாகலாம். தொடர்ந்து இவ்வாறு பழுக்க வைத்த பழங்களைச் சாப்பிட்டால் தூக்கமின்மை, தலைவலி, குறைந்த ரத்த அழுத்தம் போன்ற உடல்நலக்கேடுகள் உண்டாகும். கர்ப்ப காலத்தில் பெண்கள் கண்டிப்பாக செயற்கையாக பழுக்க வைத்த பழங்களை உண்ணக்கூடாது. பழங்களின் மேற்தோல் ஒரே சீராக மாறி இருந்தால் அது கல்வைத்து பழுக்க வைத்தது என்பதை கண்டறியலாம். தெரிந்தோ தெரியாமலோ கல்வைத்து பழுத்த பழங்களை வாங்கினால் தண்ணீரில் 5 நிமிடம் நன்கு கழுவ வேண்டும். பழத்தை அப்படியே சாப்பிடாமல் தோலை நீக்கிவிட்டு சிறு சிறு துண்டுகளாக நறுக்கி உண்ணலாம். இப்பழங்களை அதிக நாட்களுக்கு சேமித்து வைக்க இயலாது. மாம்பழ சீசன் துவங்கியஉடனே சந்தைக்கு வரும் பழங்கள் பெரும்பாலும் கல்வைத்து பழுக்க வைத்ததாக இருக்கலாம். பொதுவாகவே ஜூன்-ஜூலை மாதங்களில் சந்தைக்கு வரும் பழங்கள் இயற்கையாகவே பழுக்க வைத்தவையாக இருக்கும்.

கொ.பாலகிருஷ்ணன், பேராசிரியர் (பயிர் வினையியல்),கு.சிவசுப்பிரமணியம், பேராசிரியர் மற்றும் தலைவர்,விதை நுட்பவியல் துறை,
வேளாண்மைக் கல்லூரி,மதுரை-625 104.

**மானாவரி பயிர் அபிவிருத்திக்கு ரூ.13.85 கோடி**

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2011,01:17 IST

ஈரோடு : மானாவரி பயிர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் நடக்க தமிழகத்துக்கு 13 கோடியே 85 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.
தமிழகத்தில் திருவாரூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருச்சி, கன்னியாகுமரி, அரியலூர், கரூர், திண்டுக்கல், கோவை, மதுரை, தூத்துக்குடி, வேலூர், விருதுநகர், சேலம், ராமநாதபுரம், நாமக்கல், தேனி, ஈரோடு, தர்மபுரி ஆகிய 19 மாவட்டங்களில், மத்திய அரசின் மானாவரி பயிர் அபிவிருத்தி திட்டம், பயிர் காப்பீடு திட்டம், மண் புழு உரக்கூடம் அமைத்தல், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறு வகை விதை உற்பத்தி திட்டம் அமல்படுத்தப்படுகிறது. இதற்காக விவசாயிகளுக்கு மானியம் வழங்க மத்திய அரசு தமிழகத்துக்கு 13 கோடியே 85 லட்சம் ரூபாய் ஒதுக்கி உத்தரவு பிறப்பித்துள்ளது.
ஈரோடு மாவட்ட வேளாண் இணை இயக்குனர் அக்பர், துணை இயக்குனர் (மத்திய திட்டம்) மாரியப்பன் ஆகியோர் கூறியதாவது: மானாவரி பயிர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வாழ்வாதாரம், பொருளாதாரம் மேம்பாடு அடைய மத்திய அரசு மானியம் அளிக்கிறது. இத்திட்டத்தின் படி முதலில் நிலக்கடலை பயிரிட வேண்டும். அதை அறுவடை செய்த பின், இரண்டாவதாக சோளம் பயிரிட வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 7,500 ரூபாய் மானியம் அளிக்கப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் 500 ஹெக்டேருக்கு மானியம் அளிக்க 37 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும். இத்திட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் 100 சதவீதம் பிரிமீயத்தையும் அரசு செலுத்துகிறது. ஒரு ஹெக்டேருக்கு 1,032.50 ரூபாய் பிரிமீயத்தொகை என, 500 ஹெக்டேருக்கு 5 லட்சத்து 17 ஆயிரம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.
மண் புழு உரக்கூடம் அமைக்கும் திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்துக்கு 49 கூடம் அமைக்க 14 லட்சத்து 70 ஆயிரம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. உரக்கூடம் 600 சதுர அடியில் அமைக்க 30 ஆயிரம் ரூபாய் மானியம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயிறு வகை விதை உற்பத்தி திட்டத்தில் ஈரோடு மாவட்டத்துக்கு 11 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேர் பயிரிட 20 ஆயிரம் ரூபாய் செலவாகும். அதில், 50 சதவீதம்

மானியமாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு அதிகப்பட்சமாக 25 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். விவசாயிகள் நிலக்கடலை, பச்சை பயறு, உளுந்து, தட்டை, துவரை போன்ற பயிறு வகைகளின் விதைகளை உற்பத்தி செய்ய வேண்டும். இத்திட்டங்களுக்கு மத்திய அரசு ஈரோடு மாவட்டத்துக்கு மட்டும் 68 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. அந்தியூர், அம்மாபேட்டை, கோபிசெட்டிப்பாளையம், நம்பியூர், சத்தியமங்கலம், பவானிசாகர் என, ஆறு யூனியன்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும், தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, கால்நடை, மீன் வளம், பட்டு வளர்ப்பு போன்ற துறைகளின் அதிகாரிகளும் இணைந்து விவசாயிகளுக்கு வாழ்வாதாரம் உயர்த்துவதற்கான அந்தந்த துறைகளில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை விளக்கும் பணியில் ஈடுபட உள்ளனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**சிறுதானிய உற்பத்தியை பெருக்க அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2011,00:58 IST

நரிக்குடி : நரிக்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ரவர்த்தி கூறியதாவது: தமிழ்நாடு அரசு வேளாண்மை துறை மூலம் சோளம், கம்பு, ராகி மற்றும் குதிரைவாலி போன்ற சிறுதானிய பயிர்களின் சாகுபடி உற்பத்தியினை பெருக்கிட "இன்சிம்ப்' என்ற புதிய திட்டத்தை நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ், செயல்விளக்கத் திடல்கள் மற்றும் இலவச மினிகிட்டுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. நரிக்குடி வட்டாரத்தில் 25 எக்டர் பரப்பில் குதிரைவாலி செயல்விளக்கத் திடல்களும் நான்கு கிலோ கொள்ளளவு கொண்ட குதிரைவாலி வழங்கபடும். இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள், பொதுமக்களுக்கு ஊட்டச்சத்து உறுதியாக கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. பயன்பெற விரும்பும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலரையோ, நரிக்குடி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தையோ தொடர்பு கொள்ளவும்,என்றார்.

**விவசாய கருவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2011,01:09 IST

சிவகங்கை : மாவட்ட விவசாய பொறியியல் துறை அறிக்கை: வேளாண் பொறியியல் துறை மூலம் இயந்திரங்கள் மற்றும் விவசாய கருவிகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. சிவகங்கை, இளையான்குடி, மானாமதுரை, திருப்புவனம், காளையார்கோயில் விவசாயிகள் சிவகங்கை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திலும், திருப்புத்தூர், சிங்கம்புணரி, எஸ்.புதூர்,

சாக்கோட்டை, கல்லல், கண்ணங்குடி, தேவகோட்டை வட்டார விவசாயிகள் காரைக்குடி உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திலும் விண்ணப்பம் பெற்று, பதிவினை செய்து இயந்திரங்கள் மானிய விலையில் பெறலாம்.

**கால்நடைகளுக்கு தொற்று நோய் அபாயம் அந்தியூர் மாட்டுச் சந்தையின் அவலம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 29,2011,01:15 IST

அந்தியூர் : அந்தியூர் மாட்டுச் சந்தையில் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி, கால்நடைகளுக்கு தொற்று நோய் ஏற்படும் அபாயம் நிலவுகிறது. அந்தியூரில் பர்கூர் ரோட்டில் வாரந்தோறும் திங்கட்கிழமை அத்தியாவசிய பொருட்கள் விற்பனைக்காக சந்தை கூடுகிறது. இதே சந்தை வளாகத்தில் ஞாயிறன்று மாட்டுச் சந்தையும், திங்களன்று ஆட்டுச் சந்தையும் கூடுவது வழக்கம். மாட்டு சந்தைக்கு, ஈரோடு மாவட்டம் மற்றும் கர்நாடகாவில் இருந்து நாட்டு மாடுகள், ஜெர்ஸி, சிந்து மற்றும் எருமைகள் வரத்தாகிறது. கால்நடைகளை வாங்க தமிழகம், கர்நாடகா மற்றும் கேரள மாநில வியாபாரிகள் ஏராளமானோர் குவிவர். அந்தியூர் டவுன் பஞ்சாயத்து வசம் உள்ள சந்தை வளாகத்துக்குள் நுழையும் ஒவ்வொரு கால்நடைக்கும் 20 ரூபாய் சுங்க வரியாக வசூலிக்கப்படுகிறது. கால்நடைகளின் தாகம் தீர்க்க சந்தையில் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. தண்ணீர் நிரப்பப்படாமல் இவற்றில் மழை நீர் மட்டுமே தேங்கி, பாசி பிடித்துள்ளது. சந்தைக்கு வரும் 60 சதவீத கால்நடைகள் சனிக்கிழமை இரவே கொண்டு வரப்படுகின்றன. இதனால், கால்நடைகள் 24 மணி நேரத்துக்கு மேல் தண்ணீரின்றி தவிக்க வேண்டியுள்ளது. வியாபாரிகள் சிலர் தொட்டியில் சிறிதளவுள்ள பாசி பிடித்த மழை நீரை பருக வைக்கின்றனர். இதனால், அவை தொற்று நோய்க்கு ஆளாகும் அபாய நிலை ஏற்படுகிறது. அதுபோல், சந்தைக்கு வரும் விவசாயிகள், வியாபாரிகள் தங்குவதற்கு நிழல் வசதியோ, குடிநீர், கழிப்பிடம் வசதியோ இல்லை. இதனால், சந்தை வளாகத்தின் ஒதுக்குப்புறமான பகுதியெல்லாம் திறந்த வெளி கழிப்பிடமாக மாறி, வாரம் முழுவதும் துர்நாற்றம் வீசுகிறது. மறுவாரம் அதே இடத்தில் மீண்டும் சந்தை கூடுகிறது. இறைச்சிக்கும், வளர்க்கவும், விவசாயத்துக்கும் வாங்கிச் செல்லும் கால்நடைகளுக்கு மட்டுமின்றி, அவற்றை வாங்கிச் செல்வோரும் நோய்த் தொற்று ஏற்படும் நிலை உள்ளது. இதையெல்லாம் அந்தியூர் டவுன் பஞ்சாயத்து கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. வியாபாரிகளுக்கும், கால்நடைகளுக்கும் தேவையான அடிப்படை வசதியை, டவுன் பஞ்சாயத்து நிர்வாகம் செய்து கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

**பருவமழை தீவிரம் பூக்கள் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : ஜூன் 28,2011,21:07 IST

பொள்ளாச்சி : பருவமழை தீவிரமடைந்ததால், பொள்ளாச்சி சந்தைக்கு பூ வரத்து குறைந்துள்ளது. தற்போது, சந்தைக்கு மூன்று டன் பூ மட்டுமே வரத்தாக உள்ளது. வரத்து குறைந்திருப்பினும், பூவுக்கு போதிய கிராக்கி இல்லாததால், விலையிலும் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த மாதத்தை விட இந்த மாதம் அனைத்து ரக பூவின் விலையும் 30 ரூபாய் வரை சரிந்துள்ளது. நேற்றைய மார்க்கெட் விலை நிலவரம் (கிலோவுக்கு): மல்லிகை - 100, முல்லை - 120, ஜாதி மல்லி - 90, சம்பங்கி - 60, கோழிக்கொண்டை - 50, செண்டு மல்லி - 30, அரளி - 100 என விலை போனது. "தற்போது, சுபமுகூர்த்த நாட்கள் இல்லாததால் பூவுக்கு போதிய கிராக்கி இல்லை. இதனால், விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. இன்னும் ஒரு வாரத்தில், வரத்து மீண்டும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. ஓணம் பண்டிகை நெருங்கும் போது, கேரளாவில் பூவுக்கு கிராக்கி ஏற்படும். அதுவரை, விலையில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு இல்லை' என, பொள்ளாச்சி பூ மார்க்கெட் வியாபாரிகள் தெரிவித்தனர்.

**வெங்காய ஏற்றுமதிக்கு அனுமதி:உ.உ.க., வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜூன் 28,2011,21:25 IST

பல்லடம் : உழவர் உழைப்பாளர் கட்சியின் பொங்கலூர் ஒன்றிய நிர்வாகிகள் கூட்டம், வாவிபாளையத்தில் நடந்தது. ஒன்றிய தலைவர் ஈஸ்வரமூர்த்தி தலைமை வகித்தார். பொருளாளர் வெங்கடாசலம் முன்னிலை வகித்தார். செயலாளர் நடராஜ் வரவேற்றார். கூட்டத்தில், "ஜூலை 5ல் தஞ்சையில் நடக்கும் தியாகிகள் மாநாட்டில் ஒன்றியத்தில் இருந்து 2,000க்கும் மேற்பட்டோர் செல்ல வேண்டும்; வெங்காய ஏற்றுமதிக்கு அரசு தொடர்ந்து அனுமதி அளிக்க வேண்டும்; மஞ்சள், மக்காச்சோளத்துக்கு ஆதார விலை நிர்ணயம் செய்ய வேண்டும். "தேங்காயை விவசாயிகளிடம் இருந்து நேரடியாக அரசு கொள்முதல் செய்ய வேண்டும்; சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் தொழில்களை கிராமப்பகுதிகளில் அமைக்க அனுமதி அளிக்கக்கூடாது,' என்பன உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இளைஞரணி தலைவர் சோமு, செயலாளர் ஜெகனாதன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**கோத்தகிரியில் மலை மாவட்ட சிறு விவசாய சங்க கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 28,2011,22:10 IST

கோத்தகிரி : கோத்தகிரியில் மலை மாவட்ட சிறு விவசாயிகள் நல சங்க நிர்வாகிகள் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: தேயிலை விலை வீழ்ச்சியால், விவசாயிகள் அவதிபடும் நிலையில் மானியம் வழங்குவது; உரம் மற்றும் இடுப்பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்துவது; வன விலங்குகளால், மலைக்காய்கறி தோட்டங்கள் சேதம் ஏற்படுவதை தவிர்க்க, வனத்துறை ஆக்கப்பூர்வ நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பன உட்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சங்க பொதுசெயலர் ஆலன் வரவேற்றார். சங்க தலைவர் தும்பூர் போஜன் தலைமை வகித்தார். நிர்வாகிகள் திப்பா கவுடர், பெள்ளி கவுடர், பெள்ளன், குள்ளன் மற்றும் போஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்க நிர்வாகி லட்சுமணன் நன்றி கூறினார்.

**நெல் பயிரில் மகசூலை பாதிக்கும் நோய்கள் : விரயத்தை தடுக்க வழிகாட்டும் விஞ்ஞானிகள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 28,2011,22:25 IST

வேப்பம்பட்டு : பாக்டீரியா இலைக்கீற்று மற்றும் குலைநோய் போன்றவற்றின் பாதிப்பில் இருந்து, நெற்பயிரை பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்து வேளாண் விஞ்ஞானிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர். திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள பிபிடி 5204 மற்றும் ஏடிடீ 39 போன்ற நெல் ரகங்களில், பாக்டீரியா இலைக்கீற்று மற்றும் குலைநோய் அதிகளவில் தென்படுவது தெரிய வந்துள்ளது. இந்நோய் முதலில் கண்ணுக்கு புலப்படாத வகையில் தோன்றி, பின் வேகமாக இலைகள் முழுவதும் பரவி, மகசூலை வெகுவாக பாதித்துவிடும். இதனால், விவசாயிகள் கடும் நஷ்டத்தை எதிர்கொள்ள நேரிடும்.

பாக்டீரியா இலைக்கீற்று மற்றும் குலைநோய்களில் இருந்து பயிர்களை பாதுகாப்பது குறித்து, திருவூர் நெல் ஆராய்ச்சி மற்றும் வேளாண் அறிவியல் நிலைய பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் சுமதி கூறும் போது, "இந்நோய் ஆரம்ப நிலையில் இலையின் சிறு நரம்புகளுக்கிடையே நீர் கசிவான கீற்றுகள் போல தோன்றும். பின்னர் இலை முழுவதும் செம்பழுப்பு நிறமாக மாறும். இக்கீற்றுகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து இலைகளில் பரவி முழு இலைகளும் காய்ந்துவிடும். இதேபோல குலைநோய் முதலில் இலைப் பகுதிகளில் கண் வடிவ புள்ளிகளாக தோன்றும். பின்னர் இவற்றின் ஓரங்கள் பழுப்பு நிறமாகவும், உள்பகுதி சாம்பல் நிறமாகவும், மையத்தில் வெள்ளைப் புள்ளியும் காணப்படும். நோய் தாக்குதல் அதிகமானால்,

இலைகள் பழுத்து கருகிவிடும். கதிர்களின் கணுக்கள் கருமையாகி கதிர் ஒடிந்துவிடும். நெல் மணிகள் பதராகிவிடும். இந்நோய்கள் காணப்படும் வயல்களில் இருந்து மற்ற வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சக் கூடாது. அதேபோல் நோய் தாக்கிய பயிரிலிருந்து விதைகளை சேகரிக்கக் கூடாது. நோய் இருப்பதை கண்டறிந்தவுடன் மண் பரிசோதனைப் படி தழைச்சத்து உரம் இடவேண்டும். மேலும், பாக்டீரியா இலைக்கீற்றை கட்டுப்படுத்த சாண வடிநீர், கோசைட், ஸ்ட்ரெப்போ சைக்ளின், காப்பர் ஆக்ஸி குளோரைடு போன்றவற்றையும், குலைநோயை கட்டுப்படுத்த சூடோமோனாஸ் புளூரசன்ஸ், மாங்கோசெப் போன்றவற்றையும் உரிய விகிதத்தில் தெளிப்பான்களாக பயன்படுத்த வேண்டும்' என்றார்.

**கம்பு விதைப்பு பணிகளை மேற்கொள்ள மழைக்காக காத்திருக்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 28,2011,22:51 IST

தியாகதுருகம் : தியாகதுருகம் பகுதியில் மானாவாரியில் கம்பு பயிரிட போதிய மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர். தியாகதுருகம் பகுதியில் 10 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் மானாவாரி நிலங்கள் உள்ளன. இவற்றில் ஆண்டுதோறும் ஜூன் மாதம் இறுதியில் கம்பு விதைப்பது வழக் கம். கடந்த ஆண்டு 6,000 ஏக்கர் பரப்பில் கம்பு பயிரிட்டிருந்தனர். குறித்த நேரத்தில் மழை பெய்ததால் நல்ல பலனை விவசாயிகள் பெற்றனர். அதேபோல் இவ்வாண்டும் கம்பு பயிரிட விவசாயிகள் ஆயத்தமாகியுள்ளனர். கடந்த மாதம் பெய்த கோடை மழை ஈரத்தை பயன்படுத்தி மானாவாரி நிலங்களை உழுது பண்படுத்தி களைகளை அழித்து விதைப்புக்கு ஏற்றவகையில் தயாராக வைத்துள்ளனர். இந்நிலையில் தென்மேற்கு பருவமழை துவங்கி பல வாரங்கள் ஆகியும் எதிர்பார்த்த மழை தியாகதுருகம் பகுதில் பெய்யாததால் கம்பு விதைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் கம்பு சாகுபடிக்காக பல விவசாயிகள் போதிய மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இன்னும் இரு வாரங்களுக்குள் மழை பெய்தால் அது கம்பு விதைப்புக்கு ஏற்ற பருவமாக இருக்கும் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். சமீபகாலமாக மாடு, கோழி, தீவனங்களுக்கு அதிகளவில் மார்க்கெட் கமிட்டியில் கம்பு கொள்முதல் செய்யப்படுவதால் நல்ல விலை கிடைத்து வருகிறது. இவ்வாண்டும் கம்பு பயிரிட மழையை எதிர்பார்த்து விவசாயிகள் பலர் காத்திருக்கின்றனர்.

**முழு மானியத்தில் விதை வழங்க விவசாயிகள் சங்க பேரவை கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூன் 28,2011,23:31 IST

ஓசூர்: ""முழு மானியத்தில் இடுபொருள், விதை வழங்க வேண்டும், " என கெலமங்கலத்தில் நடந்த தமிழ்நாடு விவசாயிகள் சங்க பேரவை கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. தமிழ்நாடு விவசாயிகள் சங்க பேரவை நிர்வாகிகள், விவசாயிகள் ஆலோசனை கூட்டம் லெகமங்கலம் ஜீவா நகரில் நடந்தது. கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயற்குழு உறுப்பினர் சேதுராமன் தலைமை வகித்தார். இளைஞர் பெருமன்ற மாநில தலைவர் எம்.எல்.ஏ., ராமச்சந்திரன், மாநில குழு உறுப்பினர் லெனின், மாநில துணைத்தலைவர் லகுமைய்யா, மாவட்ட தலைவர் சீனிவாசன், செயலாளர் கண்ணு ஆகியோர் முன்னிலை வகித்தனர். "விவசாயிகளுக்கு முழு மானியத்தில் விதை, இடுபொருட்களை வழங்க வேண்டும், அதிக விலைக்கு உரம் விற்கும் கடை உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும், மின் இணைப்புகள் கேட்டு விண்ணப்பித்துள்ள விவசாயிகளுக்கு உடனடியாக மின்இணைப்பு வழங்க வேண்டும், அப்பர் சின்னார் அணை கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர். மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கஜேந்திரன், ஜெயபால், மாவட்ட குழு உறுப்பினர்கள் ஜெயராமன், நாகராஜ், கேசவன், தேவராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## ***தேயிலை தூள் விலை உயர்ந்தும் பச்சை தேயிலைக்கு விலை உயராததால் விவசாயிகள் கவலை***

*குன்னூர், ஜூன்.29–*

*தேயிலை தூள் விலை உயர்ந்தும் பச்சை தேயிலைக்கு விலை உயராததால் விவசாயி கள் கவலை அடைந் துள்ளனர்.*

*தேயிலை விவசாயிகள்*

*நீலகிரி மாவட்டத்தில் சுமார் 60 ஆயிரம் தேயிலை விவசாயிகள் தேயிலை சாகு படியில் ஈடுபட்டு வருகின்ற னர். இவர்கள் தங்கள் தோட்டங்களில் அறுவடை செய்யும்*

பச்சை தேயிலையை பெரும்பாலும் சிறு தேயிலை தொழிற்சாலைகளுக்கே வழங்கி வருகின்றனர்.

இவ்வாறு வழங்கப்படும் பச்சை தேயிலைக்கு வார விலை என்றும், மாத விலை என்றும், இரு விலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.வாரவிலை கோத்தகிரி மற்றும் குன்னூரின் ஒருசில பகுதி களிலும் வழங்கப்பட்டு வரு கின்றன.

தேயிலை தூள் தேக்கம்

தேயிலை ஏலத்தில் விற் பனையாகும் தேயிலை தூள் விலையை பொறுத்து வார விலை நிர்ணயம் செய்யப் பட்டு வருகிறது. கடந்த ஒரு ஆண்டு காலமாக ஒரு சில வாரங்கள் தவிர மற்ற வாரங் களில் நடைபெற்ற தேயிலை ஏலத்தில் தேயிலை தூளுக்கு கிராக்கி இல்லாததால் தேயிலை தூள் தேக்கம் அடைந்து விலை வீழ்ச்சி அடைந்து வந்தது. அந்த கால கட்டத்தில் தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளில் ஏற்பட்ட பிரச் சினையின் காரணமாக ஏற்று மதியாளர்கள் ஏலத்தில் பங்கு பெறவில்லை என்று கூறப் படுகிறது. ஏலத்தில் போட்டி இல்லாததால் உள்நாட்டு வர்த்தகமும் களை கட்டாமல் குறைந்த விலைக்கே தேயிலை தூள் ஏலம் எடுக்கும் நிலை ஏற்பட்டது. இதன் எதிரொலி யாக பச்சை தேயிலையின் விலையும் கடுமையான சரிய தொடங்கியது.

விலை உயர்வு

தற்போது பச்சை தேயி லைக்கு வார விலையாக 5 ரூபாய் முதல் 7 ரூபாய் வழங் கப்பட்டு வருகிறது. ஆனால் கடந்த 3 ஏலத்தில் தேயிலை ஏல மையத்தில் தேயிலை தூள் விற்பனை களை கட்டி உள்ளது. ஏற்றுமதியாளர்கள் போட்டி போட்டு தேயிலை தூளை வாங்கி வருகின்றனர். இதனால் உள்நாட்டு வர்த்தகர் களும் விலையை உயர்த்தி தேயிலை தூளை வாங்க வேண்டிய நிலை உள்ளது.

இதன் காரணமாக ஏலத்தில் தேயிலை தூளுக்கு 3 ரூபாய் முதல் 5 ரூபாய் வரை விலை உயர்வு இருப்பதாக கூறப்படு கிறது. ஆனால் தேயிலை ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு விலை உயர்வு இருந்தும், பச்சை தேயிலைக்கு விலை உயர்வு ஏற்படவில்லை.

கவலை

கடந்த 3 வாரங்களாகவே 5 ரூபாய் முதல் 7 ரூபாய் வரை வழங்கப்பட்டு வருகிறது. இந்த விலை கூலிக்கே கட்டுப்படி யாகாத விலையாக உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இது குறித்து மலை மாவட்ட சிறு விவசாயிகள் நலச்சங்க தலைவர் தும்பூர் ஐ.போஜன் கூறியதாவது:–

ஏல மையத்தில் கடந்த 3 வார காலமாக தேயிலை தூளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. ஆனால் பச்சை தேயிலைக்கு 5 ரூபாய் முதல் 7 ரூபாய் வரை விலை கொடுத்து வருகிறார்கள்.

இந்த விலை கூலிக்கே கட்டுப்படி யாகாத நிலை உள்ளது. கிலோ ஒன்றுக்கு எடுப்பு கூலியாக 4 ரூபாய்க்கு மேல் தொழி லாளிக்கு கொடுக்க வேண்டும். தேயிலை வாரியம் அனைத்து தொழிற்சாலைகளிலும் விலை பகிர்வு திட்டத்தை அமல் படுத்த உத்தரவிட வேண் டும்.

விலை பகிர்வு திட்டம்

இது குறித்து சங்கம் சார்பில் பலமுறை கூறியும், எந்த நடவ டிக்கையும் எடுக்காமல் உள் ளது. வாரந்தோறும் தொழிற் சாலைகளின் தேயிலை தூள் விற்பனை அறிக்கை தேயிலை வாரியத் திற்கு கொடுக்கப்படு கிறது.

ஆனால் விலை பகிர்வு திட்டத்தை தேயிலை தொழிற் சாலைகள் அமல்படுத்துவது இல்லை.எனவே உடனடியாக தேயிலை வாரியம் விலை பகிர்வு திட்டத்தை அமல் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது மட்டுமின்றி விவசாயி களின் நலன் கருதி மத்திய அரசு பச்சை தேயிலைக்கு 20 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்தால் தான் தேயிலை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும்.இவ்வாறு அவர் கூறி னார்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,720-2,760

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை 4,300-4,350

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 9,350-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரி உள்பட) 1,550-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரி உள்பட) 1,917-00

**நல்லெண்ணெய்**

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1 குவிண்டால் (வரி உள்பட) 9,500-00
டின் (15 கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 10,600.00
15 கிலோ டின் (வரி உள்பட) 1,850-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ
டின் (வரி உள்பட) 1,155.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின் (வரி உள்பட) 1,560.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரி உள்பட) 1,105.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 535-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஜூன்.28-

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100 கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 11,500 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 3,800 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 1,960 | 110.00 |
| துபருப்பு | ரூ. 5,200 | 58.00 |
| கடபருப்பு (பாம்பே) | ரூ. 3,300 | 38.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 6,400 | 73.00 |
| உபருப்பு (வெள்ளை) | ரூ. 6,900 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 4,000 | 46.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 4000 | 40.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,200 | 42.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 7,200 | 72.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,600 | 66.00 |
| கொள்ளு | ரூ. 2,000 | 22.00 |
| கடபருப்பு (டெல்லி) | ரூ. 3,100 | 31.00 |
| சர்க்கரை | ரூ. 2,700 | 27.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஜூன்.28-

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

1. வி.797 22எம்.எம் ரூ. 5,905
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 8577
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 10,314
4. எம்.ஜி.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 9,561
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 11,389
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 11,810
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 18,840

## கோவை உழவர் சந்தை

கோவை,ஜூன்.28-

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் (கிலோவுக்கு) | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 36-00 | காலிப்பிளவர் | ரூ. | 30-36 |
| கத்தரிக்காய் | ரூ. | 16-18 | பொறியல் தட்டை | ரூ. | 16-18 |
| வெண்டைக்காய் | ரூ. | 18-20 | தேங்காய் | ரூ. | 10-14 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 9-12 | பட்டாணி | ரூ. | 100-00 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 9-12 | பூண்டு | ரூ. | 95-104 |
| புடலை | ரூ. | 16-18 | கறிவேப்பிலை | ரூ. | 10-12 |
| பீர்க்கான்காய் | ரூ. | 22-24 | அகத்தி | ரூ. | 16-00 |
| சுரைக்காய் | ரூ. | 12-14 | வாழைக்காய் | ரூ. | 20-00 |
| பாகற்காய் | ரூ. | 18-22 | குடைமிளகாய் | ரூ. | 28-34 |
| கொத்தவரை | ரூ. | 12-14 | சாதா பீன்ஸ் | ரூ. | 20-00 |
| பூசணிக்காய் | ரூ. | 10-00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 50-00 |
| அரசாணிக்காய் | ரூ. | 6-7 | கறிபீன்ஸ் | ரூ. | 22-00 |
| மேராக்காய் | ரூ. | 18-20 | புஸ்பீன்ஸ் | ரூ. | 32-30 |
| பச்சை மிளகாய் | ரூ. | 18-20 | காளான் | ரூ. | 80-150 |
| குண்டு மிளகாய் | ரூ. | 26-28 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11-00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 24-30 | மாங்காய் | ரூ. | 8-10 |
| பெரியவெங்காயம் | ரூ. | 12-14 | திராட்சை | ரூ. | 32-00 |
| இஞ்சி | ரூ. | 34-00 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 17-00 |
| முருங்கைக்காய் | ரூ. | 24-26 | கொய்யா1கிலோ | ரூ. | 28-32 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 18-22 | மாதுளை1கிலோ | ரூ. | 50-90 |
| சேனைகிழங்கு | ரூ. | 28-26 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 13-15 |
| கருணைகிழங்கு | ரூ. | 30-00 | வரமிளகாய் | ரூ. | 90-00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | மாம்பழம் | ரூ. | 20-50 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 | ஆப்பிள் | ரூ. | 115-120 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | சாத்துக்குடி | ரூ. | 32-00 |
| சிறுகிழங்கு | ரூ. | 30-00 | நெல்லிக்காய் | ரூ. | 36-00 |
| முள்ளங்கி | ரூ. | 16-18 | ஆரஞ்சு | ரூ. | 70-00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 18-20 | வெள்ளரி | ரூ. | 14-26 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 16-18 | புளி 1 கிலோ | ரூ. | 75-00 |
| நூல்கோல் | ரூ. | 26-00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 28-30 |
| கொத்தமல்லி | ரூ. | 34-36 | அவரை | ரூ. | 18-22 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 20-24 | நிலக்கடலை | ரூ. | 34-00 |
| முட்டைகோஸ் | ரூ. | 10-12 | மக்காச்சோளம் | ரூ. | 12-18 |
| கலர்கோஸ் | ரூ. | —— | | | |
| புதினா | ரூ. | 16-00 | தர்பூசணி | ரூ. | 14-00 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 24800 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 25,300 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 26,300 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 12,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 10,800 |
| சுக்கு (புதியது) | ரூ. 14000 |
| சுக்கு(பழையது) | ரூ. 11,200 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 8800 |
| கொப்பரை நாடன் | ரூ. 6650 |
| கொப்பரை ராசு | ரூ. 6400 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6700 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ. 7800 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7100 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 20800 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 20660 |
| ரப்பர் பால் | ரூ. 16000 |
| காப்பி | ரூ. 11000 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 6000 |
| நேந்திரகாய் | ரூ. 2000 |
| இஞ்சி | ரூ. 1000 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஜூன்.28-

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,660 | 108.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1140 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1210 | 78.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1040 | —— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1140 | 71.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 95.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1650 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 125.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,020 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,550 | 100.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1060 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,070 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,070 | - |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.205.00 | அதிகபட்சவிலை | ரூ.292.00 |
| சராசரி விலை | ரூ.179.42 | சராசரி விலை | ரூ.264.57 |
| குறைந்தபட்சவிலை | ரூ.142.00 | குறைந்தபட்சவிலை | ரூ.220.00 |

**பட்டு நூல் ரூ.1,770**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 16,544.00 | 16,576.00 | 16,560.00 |
| ஒரு கிராம் | 2,068.00 | 2,072.00 | 2,070.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 51,005.00 | 54,950.00 | 54,500.00 |
| ஒரு கிராம் | 54.55 | 54.95 | 54.50 |